திரு. கே. ஏ. வகாப் : இப்போது நகராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் அதிகமான மானியம் தரப்படுகிறது. இரண்டுக்கும் இடையிலே உள்ள பேரூராட்சி மன்றங்களுக்கு மானியம் அளிக்கப்படவில்லை. தார் சாலை போடுவதற்குக் கூட 50 சதவிகிதம்தான் கொடுக்கிறார்கள். நகராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் அளிக்கப்படுவதுபோல பேரூராட்சி மன்றங்களுக்கும் அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரூராட்சி மன்றங்களுக்கும் தூசி படாத தார் ரோடு அமைப்பதற்கு 50 சதவிகிதம் மானியம் வழங்குகிறோம். இதற்காக 1971-72-க்கு 7 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போல 1972-73-க்கு 7 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா : ப்ளாக் டாப் போடுவதற்கு மட்டும்தான் மானியம் வழங்கப்படுகிறது. புதிய இணைப்பு ரோடு போடுவதற்கு மானியம் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை. இனியாகிலும் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது கொடுக்கக்கூடிய ஏழு லட்சம் ப்ளாக் டாப் போடுவதற்கே போதுமானதாக இல்லை. இணைப்புச் சாலைகளுக்கு எல்லாம் நிதி வசதி பெருகுகிறபோதுதான் உதவி அளிப்பது பற்றி யோசிக்க முடியும்.

திரு. சொ. காவேரிமணியம் : பேரூராட்சி மன்றங்களுக்கு தார் சாலை போடுவதற்கு பாதி மானியம் தருவதாகச் சொன்னார்கள். பேரூராட்சிகள் எல்லாவற்றின் நிதி நிலையும் போதுமானதாக இல்லாத காரணத்தினால்—பாதி மானியம் என்பதை மாற்றி முழு மானியம் அல்லது முக்கால் மானியமாவது அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிதிவசதி பெருகும்போது அவை எல்லாம் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

Homeopathic system of medicine

* 31. *Q.* THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Homeopathic College in this State; and

(*b*) if so, the details of the same?

1972 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : தனிப்பட்டவர்கள் கொடுக்கக்கூடிய மூல தனத்தைக் கொண்டு ஹோமியோபதி ஆசிரியர்கள் மூலம் இந்தக் காலேஜுக்கு ஏற்பாடு செய்தால் அதற்கு அரசாங்கம் அனுமதியும், கிராண்டும் வழங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஹோமியோபதி மருத்துவ வளர்ச்சிக்கு ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டு, இந்தச் சட்டமும் குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்று, ஹோமியோபதி மெடிகல் கவுன்சில் 15—5—1972 இல் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதனை பின்னர் நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்திருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் கல்லூரி ஏற்படுத்துவது என்றாலும் இந்தக் கவுன்சிலின் அனுமதி பெற்று நடக்கவேண்டும். இந்தக் கவுன்சில் செய்கிற சிபார்சுகள் ஏற்றுக்கொள்ளப் படலாம். கவுன்சில் தருகிற ஆலோசனைகளுக்கேற்ப, நிதிநிலைமைகளுக்கேற்ப எந்த அளவு இந்தத்துறைக்கு அரசாங்கம் ஊக்கமும், உதவியும் அளிக்க முடியுமோ அதனை அளிக்கும்.

திரு. நா. வீராசாமி : இப்போது தமிழ்நாட்டில் ஹோமியோபதி கல்லூரிகள் நடைபெறுகின்றனவா ? அவற்றுக்கு அரசாங்க அனுமதி கொடுக்கப்படாதிருந்தால் கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அமைச்சர் பதில் சொல்லும்போது அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளைப் பற்றியேதான் சொல்ல முடியும். சொந்த முறையில் தமிழ்நாட்டில் நடைபெறுகிற சில ஹோமியோபதி கல்லூரிகளை அமைச்சர் அறிவார் என்றாலும் அவற்றை அங்கீகரிப்பதுபற்றி, அதன் தகுதிபற்றி தமிழ்நாடு ஹோமியோபதி மெடிகல் கவுன்சில்தான் முடிவு செய்யவேண்டும்.

திரு. என். கே. பழனிசாமி : அரசு இந்த முறையை அங்கீகரித்திருப்பதன் காரணத்தினால் நகர, மாவட்ட அரசாங்க ஆஸ்பத்திரிகளில் ஹோமியோபதி ட்ரீட்மெண்டுக்காக தனி வார்டுகள் ஒதுக்கி இதனையும் ஆஸ்பத்திரிகளில் நடைமுறைக்குக் கொண்டுவர அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒரு சிறந்த ஹோமியோபதி கல்லூரி ஏற்பட்டு, எம்.பி.பி.எஸ். பாஸ் செய்த டாக்டர்கள் அங்கே ஒரு இரண்டாண்டுகாலமாவது பயிற்சி பெற்ற பிறகுதான் அலோபதி ஆஸ்பத்திரி

களில் இதனையும் புகுத்துவது பொருத்தமாக இருக்கும். அதுவரை இது போலச் செய்வதை நான் சரியான ஒன்ருகக் கருதவில்லை. கிராமப் பகுதி களில்—குறைந்த செலவில் பெரிய அளவு நன்மை பயக்கும் ஒரு திட்டமாக ஹோமியோபதி கருதப்படுவதால், மத்திய அரசின் ஆலோசனை கவனிக்கப் பட்டு தமிழ்நாட்டில் கிராமப் பகுதிகளில் இந்த ஹோமியோபதி டாக்டர் களைப் பயன்படுத்திக்கொள்கிற திட்டம் உருவாக்க முயற்சிக்கப்படும்.

திரு. அ. தேவேந்திரன் : இத்தகைய கல்லூரிகளை மிகவும் பின்தங்கிய தஞ்சை மாவட்டத்தில் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அங்கத்தினர் கூறுகிற இரண்டு தவருன கருத்துக்களை நான் ஏற்கத் தயாராயில்லை. கல்லூரிகளை அரசாங்கம் ஆரம்பிப்பதாகச் சொல்லவில்லை. அடுத்து தஞ்சை மாவட்டத்தை மிகவும் பின்தங்கிய மாவட்டமாகவும் நான் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

* 32 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள ஹோமியோபதி டாக்டர்களின் புள்ளிவிவரத்தினை அரசு சேகரித்து வருகின்றதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

ஆனல் ஓமியோபதி மருத்துவர்கள் மாவட்ட ஆட்சியாளர்களிடம் மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டுள்ளனர். 1969-ம் ஆண்டு முடிய அவ்வாறு பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 12,603.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, ஓமியோபதி டாக்டர்களுக்கு தற்போது அரசு அளித்து வரும் உதவிகளை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதுவரையில் அரசு அப்படி ஒரு உதவி செய்தது இல்லை. செய்கிற ஏற்பாடு எதுவாயினும் இனி மேல்தான் உருவாகவேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, ஓமியோபதி மருத்துவத் துறையில் போதுமான அறிவு பெருமலே சிலர் டாக்டர் என்ற பட்டத்தை சூட்டிக் கொண்டு இருக்கிருர்கள். ஆகவே இந்த ஓமியோபதியில் டாக்டர் என்ற பட்டத்தை சூட்டிக்கொள்ள குறைந்தபட்சம் ஓமியோபதி மருத்துவத் துறையில் இன்ன அறிவு பெற்றிருக்க வேண்டுமென்ற நிபந்தனையை அரசாங்கம் விதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.